செய்தி வெளியீடு எண் : 16 நாள் : 11.05.2018

***தேனி மாவட்டம்,***
***நீர்நிலைகளில் குழந்தைகள், பொதுமக்கள்***
***குளிக்கும் போது முழு கவனத்துடன் இருக்க வேண்டும்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

கோடை விடுமுறை என்பதால், தேர்வுகள் முடிவுற்று குழந்தைகள், பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் விடுமுறையினை கழிப்பதற்காக திருவிழாக்கள், உறவினரின் இல்லங்கள் மற்றும் சுற்றுலாத்தலங்களுக்கு செல்லும் நிலை தற்போது அதிகரித்துள்ளது. அவ்வாறு செல்லுமிடங்களில் நீர்நிலைகளான ஆற்றுப்படுகைகள், ஏரிகள், குளங்களில் பாதுகாப்பு இல்லாமலும், பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் உடனில்லாமல் குளிப்பதினால் எதிர்பாரத விபத்துக்களில் சிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவருகிறது.

கோடை விடுமுறை நாட்கள் என்பதாலும், மாவட்டத்தில் அதிக அளவு மழை பெய்து வருவதாலும், ஆறு மற்றும் ஓடைகளில் திடீரென நீர் பெருக்கம் ஏற்படுகிறது. எனவே, பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை நீர் நிலைகளில் குளிப்பதற்கு தனியாக அனுப்பிட வேண்டாம். எவ்வித அசம்பாவிதங்களும் நடக்காமல் பெற்றோர்களும், பொதுமக்களும் விழிப்புணர்வுடன் செயல்பட்டு தங்களின் குழந்தைகளை பார்த்துக் கொள்ள வேண்டும். தங்களின் குழந்தைகள் எங்கு செல்கிறார்கள்? என்ன செய்கிறார்கள் என்பதை பெற்றோர்கள் கவனமாக கண்காணித்திட வேண்டும். பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுக்கு நீச்சல் தெரியாதபட்சத்தில் ஆறு, குளம், ஏரி மற்றும் அணைக்கட்டு பகுதிகளில் குளிக்க அனுமதிக்கக்கூடாது. நீர்நிலைகளில் சுழல் உள்ள பகுதிகள், புதை மணல் உள்ள பகுதிகள், சகதி நிறைந்த பகுதிகள், ஆழமான பகுதிகள் போன்ற இடங்களின் தன்மை அறியாமல் குளிக்க செல்வதோ, குதித்து குளிப்பதோ கூடாது.

மேலும், மாவட்டத்தில் நீர்நிலை ஆபத்தை குறைக்க ஆபத்தான நீர்நிலை இடங்களை கண்டறிந்து அங்கு எச்சரிக்கை பலகை வைத்திடவும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் அதிக அளவில் குளிக்கும் இடங்களில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நீச்சல் தெரிந்த நபர்களை பணியமர்த்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நீர்நிலைகளில் குழந்தைகள், பொதுமக்கள் குளிக்கும் போது முழு கவனத்துடன் இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**